**In the Court of District Munsif-cum-Judicial Magistrate, Kilpennathur**

# DVC No. 3/2025

**Examination of - PW1**

பெயர் : ஷர்மிளா
த/பெ : சரவணன்
நாள் : 13.02.2026

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

வீரபாண்டியில் இருந்து வேட்டவலத்திற்கு இலவச நகர பேருந்து வருகிறது என்றால் சரிதான். வேட்டவலத்திற்கும் வீரபாண்டிக்கும் சென்று வர போக்குவரத்து நேரம் 1/2 மணி நேரம ஆகும் என்றால் சரிதான். கள்ளக்குறிச்சி மாவட்ட சமூக நலத்துறையில் எதிர்மனுதாருக்கு எதிராக புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். அந்த புகாரில் எந்தவொரு விசாரணையும் மேற்கொள்ளவில்லை என்றால் நான் சென்றேன் விசாரணை நடைப்பெற்றது. நான் புகார் மட்டும் தான் கொடுத்தேன் எந்தவொரு நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை என்றால் நான் அங்கு சென்றேன் அங்கு அந்த அலுவலகத்தில் இருந்த பெண் அதிகார் ஒருவர் லெட்டர் எழுதி என்னிடம் வாங்கினார். நான் சொல்வது போல் எந்தவொரு விசாரணையும் நடக்கவில்லை அவ்வாறு விசாரணை ஏதும் நடந்திருந்தால் அந்த ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரிதான். அதன் பின்னர் தான் திருவண்ணாமலை மாவட்ட சமூக நலத்துறையில் ஒரு மனு கொடுத்தேன் என்றால் கள்ளக்குறிச்சிக்கு சென்று வர எனக்கு பயமாக இருந்தது அதனால் திருவண்ணாமலை மாவட்ட சமூக நலத்துறையில் புகார் கொடுத்தேன். மேற்படி நானும் படித்தவர் என்றாலும் எனது தகப்பனாரும் ராணுவத்ததில் பணிபுரியும் நபராக இருந்த நிலையில் கள்ளக்குறிச்சிக்கு சென்று வர எனக்கு என்ன பயம் என்றால் கள்ளக்குறிச்சி மகளிர் காவல் நிலையத்தில் என்னையும் எனது தாயாரையும் ஆள் வைத்து தாக்கினார்கள் அதனால் எனக்கு அங்கு செல்ல வேண்டிய பயம் இருந்தது. திருவண்ணாமலையில் உள்ள சமூக நலத்துறையில் கொடுத்த புகாரில் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் என்னை தனியாக கூப்பிட்டு விசாரித்தார்கள். மேற்படி எதிர்மனுதாரர் அன்றைய தினம் வந்திருந்தாரா என்றால் இல்லை. மேற்படி விசாரணை என்பது இருதரப்பினரையும் அழைத்து தான் விசாரிக்க வேண்டும் ஆனால் எதிர்மனுதாரர் அழைக்காமலேயே விசாரணை நடத்தப்பட்டுள்ளது என்றால் என் அதிகாரி எதிர்மனுதாரருக்கு நோட்டீஸ்

அனுப்பினார். காவல் நிலையத்தில் என்னை அடித்ததாக சொல்லப்படும் நிகழ்வுக்கு நான் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. நான் வழக்கிற்காக எதிர்மனுதாரர் என்னை தாக்கினார் என்று பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வசாஆ8 என்பது பதிவு செய்யப்படாத பத்திரம் என்றால் சரிதான். மேற்படி வாடகை பத்திரத்தில் வீட்டு உரிமையாளர் வேட்டவலம் பெரியார் தெரு எண்.71 அண்ணாமலை குமாரர் குப்புசாமி என்றவரின் வீட்டில் தான் இருந்தேன் என்றால் சரிதான். மேற்படி அசல் ஆவணம் என்னிடத்தில் தான் உள்ளது என்றால் சரிதான். அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி வாசாஆ8 என்ற ஆவணம் சொல்லியுள்ள படி நான் எந்தவொரு வீட்டிலும் குடியிருக்கவில்லை ஒரு வழக்கிற்காக ஏற்படுத்தியுள்ள ஆவணம் என்றால் சரியல்ல. நான் ஒரு கல்லூரியில் படிக்கும் இளம்பெண் ஆக இருக்கும் நிலையில் தனியாக வீடு எடுத்து நான் மட்டும் குடியிருக்க வாய்ப்புகள் இல்லை என்றாலும் எதிர்மனுதாரரிடம் இருந்து வாடகைக்கான செலவு பெறவேண்டும் என்பதற்காக இந்த போலியான ஆவணத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி கள்ளக்குறிச்சி மாவட்ட சமூக நலத்துறையில் ஏற்பட்ட விசாரணையில் எதிர்மனுதாரர் மீது எந்தவொரு தவறும் இல்லை என்னை அவருடன் சேர்ந்து வாழ தகுதியில்லை என்றால் சரியல்ல. மேற்படி எதிர்மனுதாரர் சாதாரண சலவை தொழில் செய்து வருவதால் நான் சொல்லும் அளவுக்கு என்னுடைய ஆடம்பர வாழ்கைக்கு பணம் கொடுக்கும் அளவுக்கு அவரிடம் மூலதனம் இல்லை என்றால் சரியல்ல. மேற்படி 1ம் எதிர்மனுதாரர் தான் அவருடைய தம்பி ரமன்கிஷோரை பராமரித்து வருகிறார் என்றால் சரிதான். அவருக்கு பார்வை குறைபாடு உள்ளது என்றால் சரிதான். 3ம் எதிர்மனுதாரர் மீனா சக்கரை நோயாளி என்றால் சரிதான். மேற்படி மீனா தனியார் மருத்துவமனையில் சிகச்சை பெற்று வருகிறார் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. மேற்படி 1ம் எதிர்மனுதாரர் ஏழ்மையான குடும்பத்தை சேர்ந்தவர் என்றாலும் எனக்கு தேவையான ஆடம்பர வாழ்கைக்கு ஒத்துழைப்பு கொடுக்கவில்லை என்பதால் தான் நான் புறகணித்துவிட்டேன் என்றால் சரியல்ல. மேற்படி கள்ளக்குறிச்சி சமூக நலத்துறையில் கொடுக்கப்பட்ட புகார் பொய் புகார் என்று புறக்கணிக்கப்பட்டதால் தான் திருவண்ணாமலை சமூக நலத்துறையில் இந்த புகார் கொடுத்துவிட்டேன் என்றால் சரியல்ல. மேற்படி திருவண்ணாமலை சமூக நலத்துறை கொடுக்கப்பட்ட புகாருக்காக

தான் அசா8 ஆவணம் ஏற்படுத்தப்பட்டு இந்த நீதிமன்ற ஆள்வரைக்கு வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. நான் இந்த மனுவிலேயே எனக்கும் 1ம் எதிர்மனுதாரருக்கும் நடந்த திருமணம் செல்லாது என அறிவிக்ககோரி சொல்லியுள்ள நிவாரணம் எனக்கு கிடைக்கக்கூடியது அல்ல என்றால் நான் திருவண்ணாமலை நீதிமன்றத்தில் அதற்கான நிவாரணத்தை இந்த மனு உத்தரவுக்கு பின்னர் தாக்கல் செய்ய போகிறேன். 1ம் எதிர்மனுதாரர் எந்தவொரு திருமணத்தையும் செய்து கொள்ளவில்லை என்று சொல்லிதான் என்னை திருமணம் செய்துள்ளார் என்று நான் நிருபண ஆவணத்தில் சொல்லியுள்ள சங்கதிகள் பொய்யான சங்கதிகள் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள மனுவானது சட்டத்தின் படியும் வாழ்வின் சூழலை பொறுத்து நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நான் 1ம் எதிர்மனுதாரருடன் வாழ பிடிக்காததால் தான் கருகலைவதற்கு நானே காரணமாக இருந்தேன் என்றால் சரியல்ல. இந்த மனுவானது தள்ளுபடி செய்ய வேண்டிய ஒன்று என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை சாட்சி சொல்ல நீதிபதி ஆகிய என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அதனை சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு அதை சாட்சி சரி என ஏற்றுக்கொள்ளப்பட்டது.

Sd/- (M.C.Arun)
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,
கீழ்பென்னாத்தூர்